## அசுத்தத்தின் இரண்டு விதங்கள்

**1 உணர முடிகின்றவை மற்றும் பார்க்கமுடிகின்றவை, உதாரணமாக சிறுநீர், மலம் ஆகியன.**

**2 சட்டங்களுக்குட்பட்டது, அதாவது எதன் காரணமாக உழூ செய்வது அல்லது குளிப்பது கட்டாயமானதாக ஆகிவிடுகிறதோ அவை.**

அசுத்தத்தின் முதலாவது விதம், அதாவது உணரப்படுகின்ற அசுதத்தமானவற்றில் கீழ்க்கண்டவை அடங்கும்:

1 **செத்துவிட்டப் பிராணிகள்** அதாவது, எந்தப் பிராணியின் மாமிசம் சாப்பிடுவது அனுமதிக்கப்பட்டுள்ளதோ, அது அறுக்கப்படுவதற்கு முன்பாகவே இறந்துவிடுமானால் அது செத்துவிட்டதாகக் கருதப்படுகிறது. இதுபோன்றே, ஒரு பிராணி முறையாக அறுக்கப்பட்டாலும் அதனைப் புசிப்பது ஹராமானதாக ஆக்கப்பட்டிருக்குமானால் அதுவும் செத்துவிட்ட பிராணியைப்போன்றே கருதப்படும். அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

قُل لَّآ أَجِدُ فِي مَآ أُوحِيَ إِلَيَّ مُحَرَّمًا عَلَىٰ طَاعِمٖ يَطۡعَمُهُۥٓ إِلَّآ أَن يَكُونَ مَيۡتَةً أَوۡ دَمٗا مَّسۡفُوحًا أَوۡ
لَحۡمَ خِنزِيرٖ فَإِنَّهُۥ رِجۡسٌ ١٤٥ (الأنعا 145)

*பொருள்: (நபியே, இவர்களிடம்) நீர் கூறும், எனக்கு அருளப்பட்ட வஹியில், உண்பவர்களுக்கு எந்த உணவும் தடை செய்யப்பட்டதாக நான் காணவில்லை, ஆனால், செத்த பிராணியையும், ஓடும் இரத்தத்தையும் பன்றி இறைச்சியையும் தவிர. நிச்சயமாக, இவை அசுத்தங்களாகும். (அல் அன்ஆம்:145).* இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

أُحِلَّتْ لَكُمْ مَيْتَتَانِ وَدَمَانِ فَأَمَّا الْمَيْتَتَانِ فَالْحُوتُ وَالْجَرَادُ وَأَمَّا الدَّمَانِ فَالْكَبِدُ وَالطِّحَالُ

*பொருள்: உங்களுக்காக இரண்டு வகையான செத்தப் பிராணிகளும், இரத்தங்களும் ஹலாலானவையாக ஆக்கப்பட்டள்ளன. இரண்டு செத்தப் பிராணிகளாவன, மீன் மற்றும் வெட்டுக்கிளிகள், இரண்டு வகை இரத்தங்கள் ஈரல் மற்றும் கல்லீரல். (அஹ்மத்).*

2 **இரத்தம்** எந்த ஒரு உடலிலிருந்தும் வடியக்கூடிய இரத்தம் ஒரு குறிப்பிட்ட அளவில் இருக்குமானால், அது மனிதனுடைய இரத்தமா

www.uzairfalahi.com

கவோ அல்லது எந்த ஒரு பிராணியின் இரத்தமாகவோ இருப்பினும் சரியே. இவ்வாறே, சீழ் ஆகியனவும் அசுத்தமானவையாகும்.

3 **பன்றி** இது முழுவதுமாகவே அசுத்தமானதாகும்.இதன் எலும்பு மற்றும் தோலும் சுத்தமானதல்ல. அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

إِنَّمَا حَرَّمَ عَلَيْكُمُ ٱلْمَيْتَةَ وَٱلدَّمَ وَلَحْمَ ٱلْخِنزِيرِ ﴿١٧٣﴾ البقر 173 | )

பொருள்: செத்த பிராணியும், இரத்தமும், பன்றி இறைச்சியும் மட்டுமே உங்களுக்குத் தடுக்கப்பட்டவையாகும் (அல் பஃகரஹ்:173)

4 **மனிதர்களுடைய வாந்தி, மலம், ஜலம் ஆகியன** இருப்பினும், பால் குடிக்கும் குழந்தையுடைய சிறுநீர், அக்குழந்தை உணவு உட்கொள்ளும் வயதிற்கு எட்டாதிருக்குமானால், அதன் சிறுநீர் விழுந்த இடத்தில் தண்ணீர் தெளித்துவிட்டால் போதுமானது. ஹஜ்ரத் உம்மு ஃகைஸ் (ர) அவர்கள் தன்னுடை பால் குடிக்கும் குழந்தையை இறைத்தூதர் ﷺ அவர்களிடம் அழைத்து வந்தார்கள். இறைத்தூதர் ﷺ அவர்கள் குழந்தையை தன் மடியில் எடுத்துக்கொண்டார்கள், அந்தக் குழந்தை சிறுநீர் கழித்துவிட்டது. இறைத்தூதர் ﷺ அவர்கள் தண்ணீர் கொண்டு வரச்சொன்னார்கள் மற்றும் அதனை அந்த இடத்தில் தெளித்துவிட்டார்கள், முழு ஆடை துவைக்கப்படவில்லை. (முஸ்லிம்) ஆனால், பால் குடிக்கும் குழந்தை பெண்குழந்தையாக இருக்குமானால் அந்தத் துணி தண்ணீரினால் கழுவப்படவேண்டும் (இப்னு மாஜா). மல ஜலம் கழிப்பது ஒவ்வொருவருடைய இயற்கையான தேவையாகும். இஸ்லாம் இவ்விஷயத்தில் மக்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்தி விழிப்புடன் இருக்குமாறு அறிவுறுத்துகிறது. இருப்பினும், இயற்கைக்கு மாற்றமான வகையில் நடந்துகொள்ளுமாறு கட்டாயப்படுத்துவதில்லை. உதாரணமாக, உணர்ந்துகொள்ளவும் முடியாத சிறிதளவு அசுத்தத்தையும் சுத்தம் செய்யவேண்டும் என்று நிர்ப்பந்திப்பதில்லை. சிறு குழந்தைகளின்தாய்கள்குழந்தையின் மலஜலம் ஆகியன விழுந்துவிடாவண்ணம் பாதுகாப்பாக இருக்கவேண்டும், இறைச்சிக் கடைக்காரர் தன்னை இரத்தத் துளிகள் துணிகளில் விழுந்துவிடாமல் பாதுகாப்பாக இருக்கவேண்டும், கால்நடைகளை வளர்ப்பவர்கள், விற்பனை செய்பவர்கள் அவற்றின் மல ஜலத்திலிருந்து பாதுகாப்புடன் இருக்கவேண்டும். இருப்பினும், எவ்வளவுதான் எச்சரிக்கையுடன் இருந்தாலும், கண்களுக்குத் தென்படாத அளவிற்கு அசுத்தம் பட்டுவிடுவதற்கான வாய்ப்பு உண்டு. ஒருவருக்கு அதனைப்பற்றியே அறிந்துகொள்ளவே முடியாத நிலையும் ஏற்படலாம், இவ்வாறான

www.uzairfalahi.com

அனைத்து நிலைகளிலும் அல்லாஹ்வின் புறமாக அவனுக்கு மன்னிப்பு கிடைத்துவிடுகிறது. மனிதர்களுக்கான சட்டங்களும் நிபந்தனைகளும் அவனுடைய கால்களில் போடப்படும் விலங்குகள் அல்ல, மாறாக, ஒரு பார்வையற்றவனுக்குக் கொடுக்கப்படும் கைத்தடியாகும். இஸ்லாம் நடுநிலை மற்றும் உண்மை விரும்பும் மார்க்கமாகும். இருப்பினும், உணர்வுகளை மேம்படுத்தும் மற்றும் விழிப்புணர்வுடன் இருக்குமாறு வலியுறுத்துகின்றது. இறைத்தூதர் ﷺ அவர்கள் இரண்டு ஃகபருகளைக் கடந்து சென்றபோது கூறினார்கள், இந்த இரண்டு ஃகபருகளிலும் வேதனை கொடுக்கப்படுகின்றது, இது ஒரு பெரிய பாவச்செயலுக்காக கொடுக்கப்படவில்லை, மாறாக, ஒருவருக்கு அவர் சிறுநீர் கழிக்கும்போது அதன் துளிகள் துணிகளில் படாமல் பாதுகாப்பாக இல்லாதிருந்த காரணத்தினாலும் மற்றவருக்கு அவர் கோள் மூட்டித் திரிந்த காரணத்தினாலும் வேதனை அளிக்கப்படுகின்றது (புக்ஹாரி, முஸ்லிம்).

5 **வதி:** வதி என்பது ஒருவர் சிறுநீர் கழித்த பின்பு ஒரு வகையான திண்ணமான கசிவு வெளிப்படுவதாகும், ஆகவே, சிறுநீர் கழித்த பின்பு அவசரப் படாமல் பொறுமையுடன், முழுவதுமாக கழித்து முடிந்த பின் எழ வேண்டும். இது துணியின்மீது பட்டுவிடுமானால் அதனைக் கழுவி விடவேண்டும்.

6 **மத்ஜி** இது ஒருவர் தன் மனைவியுடனான களியாட்டங்களின் காரணமாக வெளிப்படும் திண்ணமான கழிவாகும். இதனால் உதூ செய்வது இன்றியமையாததாகிவிடுகிறது, குளிக்கத்தேவையில்லை. அது துணியில் பட்டுவிட்டால், துணியின் அந்தப்பகுதியைக் கழுவிவிட வேண்டும் அல்லது அதன்மீது தண்ணீர் தெளித்துவிடவேண்டும்.

7 **மனி** இது உடலுறவு அல்லது சிற்றின்பக் கனவின் காரணமாக வெளிப்படும் திண்ணமான திரவம், இதனை மனி அல்லது இந்திரியம் என்று கூறுகிறோம். இதன் காரணமாக, அந்த மனிதர் குளிக்கவேண்டியது கடமையாகிவிடுகிறது, துணியையும் கழுவ வேண்டியது கட்டாயமானதாகும். மார்க்கச் சட்ட அறிஞர்கள் இது அசுத்தமானது என்ற விஷயத்தில் கருத்துவேறுபாடு கொண்டுள்ளனர், சிலர் இது மனிதனுடைய பிறப்புக்கான மூலப்பொருள் என்ற வகையில் இது சுத்தமானது என்றும் மற்றவர்கள் இதனை அசுத்தமானது என்றும் கூறியுள்ளனர். ஈரமாக இருந்தால் கழுவிவிடவேண்டும் காய்ந்துவிட்டால் சுத்தப்படுத்திக்கொள்ளவேண்டும். ஹஜ்ரத் ஆயிஷா (ர) அவர்கள் கூறுகிறார்கள், நான் இறைத்தூதர் ﷺ அவர்களுடைய துணியில் இது காய்ந்துவிட்டிருக்குமானால் அதனைத் தேய்த்து சுத்தப்படுத்திவிடு

www.uzairfalahi.com

வேன், ஈரமானதாக இருக்குமானால் அதனைக் கழுவி விடுவேன். (தாரு ஃகுத்னி, பஜ்ஸ்ாஸ்). இதனைக் கழுவி விடுவதே சிறந்தது மற்றும் இயல்பாகவே சரியானதும்கூட.

8 **எந்த பிராணிகளின் மாமிசத்தைப் புசிப்பதில்லையோ அதன் சிறுநீர் மற்றும் சாணம்** ஹஜ்ரத் இப்னு மஸ்ஊத் (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள், ஒரு முறை இறைத்தூதர் ﷺ அவர்கள் சிறுநீர் கழித்துத் துப்புறவு செய்து கொள்வதற்காக மூன்று கற்களைக் கொண்டுவரும்படி சொன்னார்கள், நான் இரண்டு கற்களையும் ஒரு காய்ந்த சாணத்தின் துண்டையும் கொண்டு சென்றேன். அவர்கள் ﷺ இரண்டு கற்களை வாங்கிக்கொண்டார்கள், ஆனால், காய்ந்த சாணத்தின் துண்டை வாங்கிக்கொள்ள வில்லை, கூறினார்கள் இது அசுத்தமானது. (புக்ஹாரி).

9 **நாயின் வாயிலிருந்து வழியும் எச்சில் நீர்** நாயின் இந்த எச்சில் அசுத்தமானது. இதன் காரணமாகவே, எந்தப் பாத்திரத்தில் நாய் தன்னுடைய வாயைப்போட்டுவிடுகிறதோ, அதனை ஏழுதடவை கழுவுமாறு கட்டளையிடப்பட்டுள்ளது. (புக்ஹாரி, முஸ்லிம்). மற்றொரு நபிமொழியில் இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

طَهُورُ إِنَاءِ أَحَدِكُمْ إِذَا وَلَغَ الْكَلْبُ فِيهِ، أَنْ يَغْسِلَهُ سَبْعَ مَرَّاتٍ

*பொருள்: நாய் உங்கள் பாத்திரங்களை நக்கிவிட்டால் அதனைச் சுத்தப்படுத்துவதற்காக அது ஏழு தடவை கழுவப்படவேண்டும், முதல் தடவை மண்ணினால் பூசிக் கழுவவேண்டும் (முஸ்லிம், அஹ்மத்).* நாயை வளர்க்கும் விஷயத்தில் ஒரு முஸ்லிம் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். வேட்டைக்காகவும் பாதுகாவலுக்காகவும் அதனை வளர்ப்பது கூடும், ஆனால், நாகரீகத்திற்காகவும் வளர்ப்புக்காகவும் வைத்திருப்பது உகந்ததல்ல. ஏனெனில், எப்போதும் அதன் காரணமாக அசுத்தம் ஏற்பட்டுவிடக்கூடாது என்ற அச்சம் இருக்கும். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

لاَ تَدْخُلُ الْمَلاَئِكَةُ بَيْتًا فِيهِ كَلْبٌ، وَلاَ صُورَةُ تَمَاثِيلَ

*பொருள்: எந்த வீட்டில் நாய்களும் உருவப்படங்களும் இருக்குமோ அந்த வீட்டில் மலக்குமார்கள் (வானவர்கள்) வருவதில்லை (முஸ்லிம்)*

10 **மதுபானம்** மது அசுத்தமானது, அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوٓاْ إِنَّمَا ٱلۡخَمۡرُ وَٱلۡمَيۡسِرُ وَٱلۡأَنصَابُ وَٱلۡأَزۡلَٰمُ رِجۡسٞ مِّنۡ عَمَلِ ٱلشَّيۡطَٰنِ فَٱجۡتَنِبُوهُ المائد )90(

www.uzalfalahi.com

*பொருள்: இறை நம்பிக்கை கொண்டவர்களே, மது, சூதாட்டம், பலி பீடங்கள், குறி பார்க்கும் அம்புகள் ஆகியவை அருவருக்கத்தக்க ஷைத்தானியச் செயல்களாகும், அவற்றைத் தவிர்த்துக்கொள்ளுங்கள் (அல் மாயிதா:90).*

மது முழுவதுமாகவே ஹராமானதாகும். அதனை அருந்துவது, அதனைத் தயாரிப்பது, கொள்முதல் செய்வது, விற்பது அனைத்துமே தடுக்கப்பட்டவையாகும். தற்காலத்தில், மருத்துவ அறிவியல் ஆராய்ச்சிகள் இதனுடைய தீங்குகளைப்பற்றி மிகத் தெளிவாகவே எடுத்துக்கூறியுள்ளன. இதன் தீங்குகள் மற்றும் அதன் காரணமாக உருவாகின்ற வியாதிகள் எண்ணற்றவை மற்றும் மிகக் கொடூரமானவையாகும். இஸ்லாமியச் சட்டங்கள் எந்த அளவிற்கு உண்மையானவை மற்றும் பயனுள்ளவை என்பதை ஏற்றுக்கொள்வதோடு மட்டுமல்லாமல் அவற்றை அங்கீகரிக்கவும் செய்கின்றன.

அசுத்தங்களிலிருந்து தூய்மைப்படுத்திக்கொள்வது. எல்லாவிதத் தண்ணீரினாலும் ஏற்படுவதில்லை. ஆகவே, எவ்வகையான தண்ணீரைக்கொண்டு நாம் தூய்மையைப் பெறமுடியும் என்பதையும் தெரிந்துகொள்வது மிகவும் முக்கியமானதாகும்.

* * *

www.uzairfalahi.com